# ஆளும் கனவுகளோ!

கோணல் வழியழகோ கொஞ்சும் தமிழழகோ!
நாணல் அசைந்தாடும் நதியின் பேரழகோ!
கானல்வரி சொன்ன சிலம்பின் சொல்லழகோ!
வீணாய்ப் பொழுதேற்றும் காதலும் தானழகோ!
காணாக் காட்சியிலே கற்பனையும் தனியழகோ!
காலமும் உண்மையதோ காட்சியும் நிலைப்பதுவோ!

சீலமாய் மாந்தரும் செப்பிடும் பொய்யழகோ!
கோலமாய் வருந்துன்பம் குவலயத்தின் வடிவழகோ?
ஆலமாய் நிறைந்த காலத்தின் செயலழகோ!
மூலமாய் அறிவது, முடிவான பரம்பொருளோ!
பாலமாய் மனந்தேடப் பக்குவக் கதைகளுண்டே!
நீலமாம் வானமதும் நிலவிடல் உண்மையாமோ!

கண்ணுக்கு தெரிகின்ற காட்சிகளோ பொய்யாக,
விண்ணகத்து வின்மீனும் தருவதுவும் ஓர் அழகோ!
மண்ணகத்து மாந்தர்தம் மருவிலாக் கற்பனையோ!
உண்மைக்கு வரும்நிலையை உலவிடும் மனம் தேடும்!
கண்ணிகர்த்த அழகெல்லாம் காணாமல் போயிடவும்,
மண்ணகத்து வாழ்க்கை யோர்நாளில் முடியுமன்றோ!

பொன்னிகர்த்தோ புவிவாழ்வு? புரியாத நிலைமேவ,
தன்னுடைமை தன்னுரிமை என்பதனால் எதுநிற்கும்?
முன்னிட்ட கனவுகளும் முடியுமொரு நாளுண்டே!
மின்னுவதும் மிரளுவதும் மீட்டுவதும் நிலையாமோ!
சொன்னவரும் கேட்பவரும் சொல்லவரும் விதியதுவும்;
மன்னிய கதைகளென்று மறுதலிப்பார் எவருண்டோ?

**கவிவளவன்,** 21-07-2021 **விழு.வே-பக்-32**

# மனம் பூக்கும்!

பூக்கின்ற மலர்களெல்லாம் மணப்பதில்லை!
மணக்கின்ற பூக்களெல்லாம் சிரிப்பதில்லை!
சிரிக்கின்ற மனங்களிலும் துயர்களுண்டு!
துயர்சூடும் மனங்களும்தாம் எழுவதுண்டு!
எழுகின்ற மனம்தானே உண்மை அறியும்!
அறிகின்ற மனம்தானே அழகைச்சூடும்!
சூடும் வாழ்வியல்தான் மனத்தில் நிலைக்கும்!
நிலையா வாழ்விதுதான் போராடச் சொல்லும்!
சொல்லுதல் எளிதுசெயலே கடினம் இது வள்ளுவம்!
வள்ளுவன் எங்கள் வான்புகழ் கொண்ட கவியாம்!
கவிதை தன்னில் வாழ்வியல் சொன்ன நெறியாம்!
நெறியாய் உலகியல் அறிந்தால் நிம்மதி தானே சேரும்!
சேரும் மனம்தனில் சிந்தைகள் தானே நிறையும்!
நிறைவே வாழ்வில் நிம்மதிதனையும் காட்டும்!
காட்டிய அறங்களில் கனவைச் செய்யுங்கள்!
செய்யும் செயலில் சிந்தை வடிவாய் பூக்கும்!

கவிவளவன் 17-07-2021 (6.35 AM)விழு. வேர். பக் –31

# இளமையின் விளிம்பில்..! -1990 (ம.கீ-பக்-16)

இளமை எழுதும் இனிய கவிதை;
வளமை கொண்ட வாலிப வாசல்,
கனவைப் பேணும் காதற் பருவம்!
உலகை அறியும் உன்னத வயது!

கலகம் மூளும் கன்னியர் அசைவில்!
நிலவின் ஒளியில் நிச்சயமாகும்!
காதல் அரும்பிக் கனவை வளர்க்கும்!
சாதல் வரையென சத்திய மாகும்!

அழகின் வடிவோ ஆயிர மாகும்!
இளமையில் இல்லா ஏற்றம் ஏது?
வளமை கொண்ட வாலிப முறுக்கு,
எட்டு திசையையும் கட்டி இழுக்கும்!

தொட்டுத் தழுவிடும் தோகை மனத்தால்,
கட்டுத்தறி யின்றி காவியம் பாடும்!

# வாழ்வியல் கலன்கள்!

உறவும் பிரிவும்; ஒவ்வொரு நொடியிலும்,
கருத்தாய் நமக்கு வாழ்க்கையைக் காட்டும்!
வரவும் சிலவும் அதனுள் வகுத்த நியதியாய்,
வாழ்வியல் தன்னின் உண்மை சொல்லும்!
அறமாய் வகுத்த அடுத்த நியதிகள்;
பிறந்திடும் போழ்தில் உண்மை தெறிக்கும்!
பிறவியின் நோக்கம் புரிந்தவர் உண்டோ?
பிறவியின் பயனை அறிந்தவர் உண்டோ?

அறமாய் வாழ்தல் அறனே என்பர்!
மரமாய் வாழ்பவர் மனிதரில்லையோ?
உரமாய் தன்னிலை உணர்ந்தே வாழ்வர்!
அருகில் இருப்பவர் நிலையை எண்ணாது,
திறமாய் தன்னிலை உயர்திக் கொள்வர்!
தரமாய் தானே வாழ்வேன் எனவுரைத்து,
தலைக்கனம் பிடித்து வாழ்வோருண்டு!
மலைப்புடன் நோக்க மற்றவர் நலங்களை,

மகிழ்ந்தே அழித்து வாழ்பவர் தாமும்;
மருவின்றி தானே இங்கு வாழுகின்றார்!
அறமாய்ச் சொன்ன நியதிகள் யாவும்,
அடுத்த பிறவியில் காட்டும் என்றால்;

இருந்து பார்த்துச் சொல்பவர் யாரோ?
மருந்தாய் நினைவுகள் மனதிலிந்தால்,
மனத்தால் வாழ்வை நிறுத்துப் பார்க்கலாம்!
குணமும் அன்பும் வாழ்வை நிறைக்கும்!

-- கவிவளவன் 01-08-2021 **விழு.வே-பக்-34**

## கோணல் கனவுகள்!

உள்ளத்தில் ஊனமிருந்தால் உறவுகள் நிலைப்பதில்லை!
கள்ளமில் மனத்தைத் தானும் காயமிட நினைப்பவர்க்கு;
எள்ளளவும் இன்பம் இல்லா இயன்நிலையே வாழ்க்கையாகும்!
புள்ளினங்கள் ஒலியெழுப்பப் புவியிலே காலைப் பொழுது!
கொள்ளையழகு குவலயத்தில் கோடிட்ட வரையுண்டோ?
அள்ளக் குறையாத அவனி இன்பத்தில் காதலும் ஓர்நிலையே!
பிள்ளைக் கனியமுதின் பிரியச் சொற்களும் காதல் தரும்!
பள்ளமாய் மனமிருந்தால் பார்ப்பவை யாவும் தவறாகும்!

பள்ளமே ஊனமென்போம் சூழும்பரிதாபம் மனதிலேதான்!
துள்ளும் இளமையிலே தூது சொல்லும் கண்களுக்கு காதலது!
கிள்ளும் மனத்திருந்துக் கிளுகிளுப்பாய் வேலை செய்யும்!
தள்ளாத வயதினிலும் தடமாக மனதில் தானே எழும்!
கள்ளமில் மனமென்றும் காட்சியில், தான் நிலைக்காது!
வெள்ளமாய் ஓடுகின்ற விழிகொண்ட பார்வையதை;
உள்ளத்தில் ஊனமிட்டு, ஊதிப் பெரிதாக்கி விடல்,
பள்ளமான மனமன்றி அதனைப் பகர்தல் எவ்வாறு?

கள்ளமில் இயற்கை தானும் தொய்வின்றித் தொடர்ந்துவிட,
கொள்ளும் ஓர்நிலையே ஆணினத்தில் சிறகசைக்கும்!
அள்ளுமோர் வாழ்வியலின் அழியாத் தொடர்நிலையாம்!
கள்ளமாய் மனம்தேடும், கற்பனைகளோ இயற்கைவழி?

கவிவளவன்,
26-06-2021(12.30 ஏ.எம்) - விழு.வே பக்-27

## மாறுக மனமே!

மாற்றம் என்பது மனத்தின் பிறப்பே!
தோற்றம் என்பதும் அதனின் நிலையே!
சீற்றம் பிறப்பதோ அறிவின் வழியாம்!
காற்றாய் மனத்தை நிறுத்திடுவோம்!

கற்பனை தன்னை உளம் நிறுத்தி,
அற்புத அறிவைப் பகுத்திடுவோம்!
சொற்சுவைச் தாரா சொற்களையும்,
கற்றநல் அறிவால் விலக்கிடுவோம்!

-வேறு-

மற்றவை போலே நம்வாழ்வும்,
மண்ணின் மீதுதாம் என்போம்!
சொற்சுவை நிரம்பிய சொற்களினால்,
சுகமாய் யாவரையும் அணைத்திடுவோம்!
மற்ற உயிர்கள் யாவைக்கும்,
மனத்தால் தீங்கை களைந்திடுவோம்!
நற்றுணையாவது இறையென்றே,
நவின்ற வழியில் மனம் கொள்வோம்!

- 24-06-2021 (6.55AM) விழு.வே பக்-30

## இனிய மனமே!

ஆடும் உள்ளத்தில் ஆயிரமாய் கற்பனைகள்!
பாடும் ஒலிபொருந்தும் பக்குவம் தானெதற்கு?
வாடும் மனந்தனக்கு வகுத்திடும் பாடங்கள்;
கூடும் துன்பத்தில் கொள்கைகள் தானுண்டோ?

நாடும் உள்ளத்தில் நலம்செய்யும் அறிவுண்டோ?
தேடும் அறிவுந்தான் தெளிந்திடும் நாளெதுவோ?
சூடும் சிந்தையதே மனச்சோர்வை நீக்கி விடும்!
ஆடும் உள்ளமதும் அடுத்ததாய்க் கதை கேட்கும்!

ஆளும் சிந்தையதை அளவிட்டுச் செய்திடுவோம்!
மூளும் இன்பத்தின் முகவரிகள் அறிந்திடுவோம்!
மீளும் உலகியலின் மேன்மைகள் தெளிந்திடுவோம்!
தோளும் கரந்தாங்கும் கொள்கையே வாழ்க்கையது!

தோல்வியாய் மனமிருந்தால், துயரங்கள்தான் தெரியும்!
வேள்வியாய் மனந்தன்னை விருப்புடன் மாற்றிவிட,
கேள்விகள் யாவுக்கும் கிடைத்திடும் விடைதானே!
ஊழ்வினை என்பதுமோர் ஊட்டிய அறிவுதானே!

**கவிவளவன் 14-07-2021 (11.00 PM)**
**விழு.வே-பக்-29**

## பேதைமைக் களைவோம்!

மனத்தைச் சூடும் மாய வலைகள்
பிறவிப் பிணியின் பேதைமை தானோ?
கனமாய் நினைவைக் கலைத்தே வைத்து,
மனமது காணும் நிலையது என்ன?
மனமே திறப்பாய் மனதில் நிறுத்தி,
மாயநிலையைக் களைதல் வேண்டும்!
சினமே அறிவைத் தோற்கச் செய்யும்
சிந்தையைதானே மனதிலேற்றும்?

வனமே மழையின் நிலையைக் காக்க,
வகுத்ததாம் நியதி வாழ்வியல் தன்னில்!
மனமே அறிவின் பெருங்கலனாகும்!
மற்றவை அதனில் தன்னிலை எய்தும்!
மனத்தை ஆளும் நியதிகள் கற்போம்!
மருவின்றி வெல்ல கலன்கள் நிறையும்!
சினமென்பதும் சிந்தையில் வராது,
சிறுமை என்றொரு நிலையும் தெரியாது!

ஆனந்தமாய் இந்த வாழ்வினைச் சூடிட
அருந்தவக் கனவுகள் அரங்கம் ஏறும்!
நானென்ற சிந்தையை நலமாய் ஒழித்து,
நாளெல்லாம் பெருமைகள் அடையக் கண்டு,
ஏனிந்த வாழ்வென்ற இயன்நிலை அறிந்து,
இன்பங்கள் சூடும் மனமதும் கொண்டு,
ஆனந்த மனத்தின் சிறுமைகள் களந்தால்,
செவ்விய வாழ்வின் பெருமைகள் தெரியும்!

- **கவிவளவன்** 26-07-2021 (12.05 PM)**விழு.வே-பக்-33**

## அறிவின் கலன்கள்!

ஆயிரம் கனவுகள் அகத்தில் சுமந்து,
ஆலயம் தோறும் தேடியலைந்து,
போகும் வழியைப் புரிந்து கொள்ளாது,
போகா வழியில் மனத்தைச் செலுத்தி,

ஆகா என்னும் ஆனந்த வாழ்வை,
வேகா உணவாய் உண்டு சிதைந்து,
காகம் போலே சுற்றம் பேணாது,
ஊகம் கொண்டு யாவையும் குழப்பி,

உன்னத வாழ்வின் செயல்நிலை மறந்து,
தன்னை மறந்து, தன்னிலை சிதறி,
கடக்கும் வாழ்வியல் மனத்தில் எண்ணாது,
அடங்கா வெறியாய் அனைத்தும் தேடி,

தடங்கல் வந்தால் பொங்கி எழுந்து,
முடங்கும் மனத்தில் முகவரி தொலைத்து,
விடைதெரியாத வேதனை எய்தி,
படை கொண்டு மனத்தில் நொந்து,

கடக்கும் வாழ்வை கனத்ததாய் ஆக்கி,
தடைகளைக் கடக்க மனத்தை ஆளும்
தகுதியும் மறந்து, தன்நிலை கொல்வார்!
இருக்கும் வரையில் இயல்பாய் வாழ்ந்து,

இறப்பு என்பதன் இயல் நிலை யுணர்ந்து,
மறக்கும் மனத்தால் பகமை துறந்து,
சிறந்த மனமாய் பொறாமை களைந்து,
அறமே வாழ்வின் அறிவென்றுணர்ந்து,

அதுவே இறையென்று அகத்தில் தெளிந்து,
புதியதாய் நாட்களை பூரித்தணைந்து,
மதமெனும் பேய்களை மனத்தில் துறந்து,
மானிட வாழ்வின் இன்பம் எய்தி,

மண்ணகம் போற்ற வாழ்தல் வேண்டும்!
திண்ணமாய் அறிவை திறம்பட செய்வோம்!
எண்ணிய வழியில் யாவும் அடைந்து,
கண்ணிய வாழ்வின் கரைகளில் நிறைவோம்!

**கவிவளவன்** 15-08-2021 3.41 PM (வி.வே.பக்-34)

தேரா மனமே தெளியாக் கனவில்,
திகைத்துப் போகும்!
ஆரா அமுதாய் நிலையும் மனத்தில்
நிர்மூலமாக்கும்!
சீராய்க் கனவைச் செதுக்கி வைக்க,
சிறுமை அகலும்!
பேராய் பலவும் பெருமையாய்த் தேடி
பித்தனாயாகும்!
நீராய் மனதை நெறிப்படுத்த போகும்
வழியே தடமாகும்!

## ஆடிப் பெருக்கிய காவிரி

விரிந்த காடுகளில் வளர்ந்த காவிரியாள்,
புரிந்த சாதனைகள் சொல்லில் அடங்கா!
அரியதாய் மழையை ஆக்கிய பெருமையுடன்,
அரங்கனுக்கு அரங்கம் செய்வித்து அதனிலும்
அடங்காப் பெருமையுடன் குடந்தையில் கோயில்கள்,
அடுத்து புகார்க் கடலில் புகுவது வரையில்,
அளவிலாப் பெருமையாம் சோழ மண்ணில்!
உலவிய காலமும், உன்னத காலமும்;
உரமின்றிப் போக ஓய்ந்ததாம் காவிரியே!
நீரும் நெருப்பும் நித்தியத் தேவையாம்!
மருவின்றி போற்றினான் தமிழன் தானே!

- **கவிவளவன்** 03-08-2021 - **தே.க.பக்-21**

## எட்டயபுரம் ஈந்த செல்வம்!

எட்டயப் புரத்தில் எழுந்தவோர் உயிர்மூச்சு,
தட்டாமல் தமிழுக்குத்தனி தகுதியை ஈந்தது!
கொட்டமாய் மானுடத்தின் கொள்கையில் நின்றது!
வட்டமாய் வாழ்வியல் சூழ்ச்சியை உடைத்தது!

கொட்டியத் தமிழால் தானும் உயர்ந்தது!
கிட்டிய நேரத்தில் மானுடம் சொன்னது!
கட்டிய மொழியில் வாழ்வியல் நிறைத்தது!
தட்டிய உணர்வால் ஆண்மீகம் தழைத்திட

தயங்காமல் சிந்தித்த மானிடப் பறவை!
அயலார் தம்மை அச்சுறுத்திய மாகவிஞன்!
இயைந்து போற்றிட எழுதினன் அல்லன்!
இயன்நிலை வாழ்வில் மானுடம் வென்றவன்!

இன்பம் துன்பம் யாவிலும் நிறைந்தவன்!
மண்பதை செழித்திடல் மனத்தில் கொண்டு,
மன்னிய தமிழோடு மலர்ந்து நிறைந்தவன்!
அன்னவன் நினைவில் இன்று நூறாண்டு!

தென்னவன் ஆக பிறந்து எழுந்தாலும்,
மண்ணகம் முழுவது போற்றிட நிறைந்தவன்!
எண்ணம் யாவிலும் உயிர்களைப் போற்றினான்!
கண்களில் நிறைந்த யாவிலும் கனிவைக்

கண்டே எழுந்து, வாழ்வியல் சொன்னவன்!
திண்ணமாய் உயிர்கள் யாவும் இறைமை
எண்ணுமோர் சொல்லும் செயலும் கொண்டு,
மண்ணகம் போற்றிய எங்கள் பாரதியாமே!

**கவிவளவன்** (11-09-2021)
(வி.வே.பக்-36)

## மனமே கேள்!

வானும் மண்ணும் வாழ்வியல் கலன்கள்!
தேனின் சுவையைப் பூக்களோ அறியும்?
தனியே வண்டினம் அதனையோ அறியும்?
கனிதரும் மரத்தின் கிளைகளும் அறியும்?

கடமையாய் நகர்த்தும் வாழ்வியல் நெறிகள்!
தடமெனத் தனியே வகுத்தவன் மனிதன்!
விடமென வாழ்வின் பக்கங்கள் நிறைப்பான்!
மடமையின் உச்சம் மானிடர் வாழ்வே!

மகிழ்ச்சியும் இன்பமும் மனத்தின் சொத்து!
புகழ்ச்சியே வாழ்வின் புதுப் புணல் என்பான்!
அகமும் புறமும் ஆனந்தம் தேடிட;
இகத்து வாழ்வின் ஏதேதோ செய்வான்!

இனிய கனவோ இயைந்திடும் வாழ்வு?
கனியின் சுவையை நாவே அறியும்!
பனியில் மலர்கள் பாங்குடன் மிளிரும்!
தனியே யாவும் தன்னிலை செய்திடும்!

தகைவிலா மனிதன் தன்னிலை அறியான்!
பகையிலா மனமும் பக்குவ நெறியும்;
அகத்தில் நிறைத்தால் ஆனந்தம் கிட்டும்!
இகத்தின் வாழ்வு எதற்கோ என்பதை,

இயைந்து தேடிடில் உண்மை விளங்கிட
இன்பம் பெருகியே உள்ளம் நிறையும்!
இயற்கையை சிதைக்கும் வாழ்வும் எதற்கு?
இயன்நிலை சிதைந்து எதுதான் நிறைவோ!
**கவிவளவன்** 18-09-2021 (11.15 பி.எம்.)
வி.வே. பக் 38

## மணம் பெறுவோம்!

வருந்தாத உள்ளங்கள் தன் வருத்தத்தில் எதை தேடும்?
விருந்தாக வாழ்க்கையிதின் விருப்பங்கள் எதில் நிறையும்?
கருந்தேளும் வாழ்க்கையிதில் கொட்டுதலில் நிலை கொள்ளும்!
திருந்தாத உள்ளங்கள் திருந்துதற்கோர் எல்லை எது?

அருமருந்தாய் ஆற்றலுடன் ஆளும் நிலை யாரறிவார்?
பொருந்தாத சிந்தனைகள் பொருள் தேட எவன் செல்லும்?
கருக்கொண்ட மேகங்கள் கனமழையைத் தான் பொழியும்!
சுருக்கென்று சொல்தைத்தால், சோர்வுறும் மனம்தானே!

விருப்பங்கள் இல்லாது, வியனுலகில் எதைதேடும் மனம்?
கருவங்கள் களைந்தொழித்து அற்புதமாய் மனம் செய்வோம்!
பருவத்தில் மாறுதல் போல், பக்குவமாய் மனம் நிறைவோம்!
பெருமைமிகு வாழ்க்கையென்று, பேதமைகள் நீக்கிடுவோம்!

அரிதான செல்வங்கள் அன்பான வாழ்க்கையதே!
புரியாத சிந்தனையை புறந்தள்ளி வைத்திடுவோம்!
மருவின்றி உயிர்யாவும் மண்ணில் வாழ வேண்டும்!
அருளாய் மணமாய் ஆனந்த வாழ்வுதனை அடைவோம்!
**கவிவளவன்** 21.09.2021 (12.01 ஏ.எம்) வி.வே. பக் 39

### காலக் கணக்கு!

வலியும் வேதனையும் வடிக்க வொன்னா வரிகளில் நிறையும்!
பிறப்பும் இறப்பும் காலத்தின் கணக்கு!
நல்ல பிள்ளைகள், பூர்வ புண்ணியம்!
அல்லாதாயின் ஆன்ற தீவினை!
எண்ணி இருப்பதும் எண்ணாமல் அழுவதும் காலக்கணக்கு!
பெற்றவர் சாபம் பிள்ளைகளுக்கில்லை!
வாழ்வின் நெறிமுறை அறியாதிருத்தலே,
மனத்தை நிரப்பும் கோலம் ஆகும்! 20-10-2021 (13.33 hrs)

## இளங்காலை! (ம.கீ-பக்-26)

பனியெழுதும் காலையதோ!
படர்கின்ற ஒளியழகதோ!
மடல் விரித்துப் பூ மலரும்!
மணம் பரப்ப பறவை எழும்!

கடல்நீரில் முகம் காட்டும்,
கதிரொளியும் தனியழகோ!
கன்றழைக்கும் ஆவினங்கள்!
தென்றலென மனதில் விழும்!

அன்றலர்ந்த மலர்போலே,
மன்றிலில் மனம் எழும்ப,
நன்றென மனஞ் சூழும்;
இன்பங்கள் சொல்வேனோ!
- கவிவளவன்
30-09-2021 (11.45 பி.எம்.)

## கதிரே போற்றி!

எழுகின்ற கதிரே போற்றி!
வளர்கின்ற அறிவே போற்றி!
தளர்வில்லா மனமே போற்றி!
தடையில்லா அன்பே போற்றி!
மலர்கின்ற மணமே போற்றி!
மருவில்லா குணமே போற்றி!
அருள் தேடும் மனமே போற்றி!
ஆனந்த நிலையே போற்றி!
19-10-2021 (07.29 A.M)

### வாழ்வியல்!

இறந்தபின் நிறைவது எங்கோ அறியோம்!
உயிரது உண்டோ அதுவும் அறியோம்!
பிறப்பின் நோக்கம் அறிந்தவர் எவரோ?
அடுத்தவர் மனத்தை துன்புறுத்தாது,
உண்மையுணர, அறிவால் மனத்தை
அழகுடன் செய்து, நல்லன எண்ணி,
அறமுடன் வாழ்வோம்!
அவரவர் வழியில் இறைவனைத்தேடி
இன்புற்று வாழ்வோம்! 20-10-2021

### ஒரு வெண்பா

கற்றவை கற்பவை கல்வியின் சீராகும்
அற்புத ஆற்றல் தந்திடும் – சொற்சுவை
பெற்றிடும் ஆளுமைத் தேரிட நீயுமே
பற்பல உத்தியை பற்று - 05-01-2022 (09.56 பி.எம்.)

## நினைவில் கண்ணதாசன்! - 17-10-2021

சிறுகூடல் பட்டி யெனும்
சிற்றூரில் தான் பிறந்து
பெறுவதற் கரிய பெயரெலாம்
திரைத்துறையில் தானும் பெற்று,
மறமாவல் மானிடர்க்கு வாழ்வியலின்
மகத்துவம் பலவும் சொன்னான்!
மறவோமோ அவன் பெயரை பாரதியின்
தலைமுறையில் எங்கள் தலைமகன்!

## வெண்பாக்கள்!

கற்றவை கற்பவை கல்வியின் சீராகும்
அற்புத ஆற்றல் தந்திடும் – சொற்சுவை
பெற்றிடும் ஆளுமைத் தேரிட நீயுமே
பற்பல உத்தியை பற்று
- 05-01-2022 (09.56 பி.எம்.)
கொவ்வை இதழ்கூட்டும் முல்லைப்பூ பல்வரிசை,
செவ்விய அழகின்சீர் செங்காந்தள் கைவிரல்கள்!
பாவைக்குப் பேரழகாய் கண்களில் சீர் குவளை;
பூவைமேல் எத்தனை பூ - கவிவளவன்
08-01-2022

## மனந்தெளிவோம்! (வி.வே.பக்-12)

காலில் விழுவதும் பின்பு கழற்றி அடிப்பதும்
வாழ்வியல் காணும் விதியே!
வாலைக் குழைத்திடும், வரம்பு மாறிடில்,
ஆளைக் குலைத்திடும் அதன் அன்பே!
மேலே எழுவதும் மேனி சிலிர்ப்பதும்,
மேதினியில் மனம் காணும் ஓர் நிலையே!
காலை எழுந்திடும் கதிரின் ஒளியைக்
காட்சிப் படுத்திடும் மனந்தான் இனிதே!

ஆலைக் கரும்பென ஆகிடும் நிலையில்,
ஆண்டவனத் தேடிடும் அறிவுசால் மனமே!
சோலைக் குயில்களின் சொற்கள் தாமும்
சுகமாய்க் காதினை அடைதலும் இயல்பே!
பாலை நிலந்தன்னில் பட்டாடைதான் பெரிதோ!
பன்னீராய் நன்னீரைப் பார்த்த விழிக்கே!
பாலில் துளிவிஷமாய் பயன்படா சொல்பேசி,
பயணிக்கும் மனிதரவர் மனம் சதியே!
12-02-2023 (08-10 AM)

தென்றலது தூதுவிட
தேன்மலரில் பாடும் வண்டு,
அன்றலர்ந்த மலரினூடே
மகரந்தம்தனைச் சேர்க்க,
குன்றாது இயற்கைவழி
குவலயத்தை நிலைத்திடுமே!
என்றுமிந்த இயற்கைநிலை
எவ்வுயிர்க்கும் முறையன்றோ!
12-02-2023

## அறிவின் சீற்றம்..! 21-11-2021 (11.55 PM)

கூறு கெட்ட மனிதருக்காய் என்றும்
நான் கோலமிடுவதில்லை!
மாறுபட்ட சிந்தனைகள் மண்ணில்
என்றும் வாழ்தல் வேண்டும்!
தாறுமாறாய் வாழ்பவரின்
வழக்கதுவும் என்றுதான் மாறும்?
நூறுகதை சொன்னாலும்
நூலறுத்து பட்டம் விடுமந்த
கூறுகெட்ட மனிதரை நாம்
என்ன செய்ய இயலும்?
ஆறுபோகும் வழியறிந்தும்
எதிர்நீச்சல் போவதேனோ?
கூறு கெட்ட மாந்தருக்கு
கொள்கைதான் எதுவும் உண்டோ?
மாறுகின்ற அந்த உலகியலை;
மருவின்றி நாமும் கேட்டிடுவோம்!
-கவிவளவன்

## *"மை" யின் மாட்சி!* (வி.வே.பக்-84)

தாய்மை என்பது அன்பின் ஆணிவேர்!
தூய்மை என்பது புறம் காட்டும் அழகு!
வாய்மை என்பது அகம் கூட்டும் அழகு!
பொய்மை என்பது அறிவின் வழுவலே!

ஆண்மை என்பது நல் அறிவின் சுடரே!
பெண்மை என்பது இயற்கையின் கனவு!
தண்மை என்பது செயலின் நிலையாம்!
கண்மை என்பது அழகின் உயிர்ப்பாம்!

உண்மை என்பது நெறி செய்யும் அறிவு!
அண்மை என்பது அருகினில் இருத்தலே!
நன்மை என்பது யாவருக்கு நிறையாம்!
இன்மை என்பது இல்லாது ஆளுமே!

வறுமை என்பது வளர்ச்சியில் அழியும்!
சிறுமை என்பது தெளிவில்லா அறிவே!
பொறுமை என்பது மனத்தின் மாட்சி!
திறமை என்பது நிறையும் செயலே!

பெருமை என்பது மயக்கத்தின் ஆட்சி!
அருமை என்பது மனம் காணுமழகே!
கருமை என்பது ஒளியில்லா நிலையே!
உரிமை என்பது வாழ்வியல் தேடலாம்!

தனிமை என்பது மனத்தின் நிலையே!
இனிமை என்பது உள்ளத்தால் சூழும்!
இம்மை என்பது இயன்நிலை வாழ்வே!
செம்மை என்பது செயலின் நல் வடிவே!
-கவிவளவன் 02-08-2022 (01.00 PM)

## தமிழ்தான் அறிவோமே!

தென்னைக்கு கீற்றென்றும்,
தெளிந்த நீர்க்கு ஓடையென்றும்;
பனைக்கு ஓலை என்றும்,
பரந்த நீர்நிலையை ஏரி என்றும்;
கண்தேடப் பரந்து நிற்றலினால்,
கடலைப் பரவை யென்றும்;
வாழைக்கு கன்று என்றும், வளர்
தென்னைக்குப் பிள்ளை என்றும்;

நெல்லுக்குத் தாள் என்றும்,
வாழை தனக்கு மடல் என்றும்;
சொல்லுக்குள் சொல் தொடுத்துச்
சுகமான தமிழ் வளர்த்தோம்!
தொய்வதினால், மயிலுக்கும் கரும்புக்கும்
அதனைத் தோகையென்றோம்!
இணைந்து வளர்வதனால் இலையாகி,
பூவுக்கு அதனை இதழென்போம்!

ஏரியில் சிறியதைத் தாங்கல் என்போம்!
இன்னும் சிறியதோ குளமாகும்!
தேங்கும் நீர் அளவில் குறுகியதால்,
அதனைக் குட்டை என்போம்!
பருகிடும் நீர்ப்பரப்பு தனைநாம்
அழைப்போம் ஊருணி என்றே!
ஓடும் நீர்தன்னை, ஓடை யென்போம்,
பெரியதை ஆறே யென்போம்!

தேங்கிநீர்ப் பாய்ந்திடுங்கால்
அதனைக் கண்மாய் என்போம்!
பாய்கின்ற வழியதுவே பாய் காலாம்!
வடிவிடமோ சீர்வடிகாலாம்!
காலப் போக்கில் வாய்க்கால் வடிகால்
என்றே வழக்கும் கொள்ள,
கால்வாய் என்பதுமாய்ப் பெயருமிட,
அதுவே காவாயாய் ஆனதுவே!

காலத்தால் சென்னையிலே
அதனைக் காவாய் என்றனரே!
அழகாய் விழுவதனால் அருவி யாக,
சுழன்று வர அது சுனையாச்சு!
வாழைக்கு மடலைப் போல்
தாழைக்கும் அது மடலாம்!
வளைந்து நிமிர்வதினால், காதுக்கும்
மடலென்று கூறி நின்றோம்!

கல்லுதலால் கல்வி என்றோம்!
காணுதலைக் காட்சி என்றோம்!
சொல்லெல்லாம் பொருள்குறித்தே,
சுகமாய் நிறையுமென்ற,
தொல்காப்பியன் சொன்ன அந்த
இலக்கணத்தில் குறையுண்டோ?
காப்பியச் சொல்லுக்கு ஈடேது?
எங்கள் தமிழுக்கும் இணையேது?
12-03-2023 (08-30 AM) (வி.வே.பக்-85)

## முதுமைக்கு உண்டோ முகவரி?* (வி.வே. பக் –18)

முதுமை என்னும் முகவரி தன்னில்
ஓய்ந்து போக வேணாங்க!
பதுமை போலே வாழ்வதும் கூட
பக்குவம் ஆக ஆகாதுங்க!
புதுமை என்றும் சொல்லி,
புரியாத வழியைத் தேடாதீங்க!
வதுவை கூடி வாழும் பிள்ளைகள்
தன்வழி போக விட்டிடுங்க!

அறிவைச் சொல்லும் அப்பா என்று
அறிவுரை தன்னை செய்யாதீங்க!
அன்பில் சிறந்த அம்மா என்று
அடிக்கடி சொல்ல நினைக்காதீங்க!
என்பின் உயிர்கள் தன்வழி வாழும்
தகைமை கொண்டே பிறக்குதுங்க!
தன்பலம் அறிவு கொண்டு யாவரும்
தம் வழியில் தானே செல்வாங்க!

என்பலம் அறிவு என்று ஏதேனும்
சொல்லி அவர்களை குழப்பாதீங்க!
உன்பலம் உனக்கு, என்பலம் எனக்கு
எனச் சொல்லித்தானே போவாங்க!
குன்றின் விளக்காய் குவலயம் போற்ற
வாழ்வது ஒன்றும் இல்லீங்க!
தன்மனம் தழைந்து, தகுதியில்
நிறைந்தே நாமும் இனி வாழ்வோங்க!
*கவிவளவன்* 29-01-2023 (2.45 பி.எம்)

செம்மொழியே தமிழென்று,
செம்மாந்து போற்றிடுவோம்!
இம்மையிலும் மறுமையிலும்
எஞ்ஞான்றும் எவ்விடத்தும்,
விம்மும் குரல்வடியாய்;
வியக்கும் சொல்லழகாய்,
தம்முள் தாமெனவாய்,
தரனியிலே புகழ் பரப்பும்! 19-04-2022

## *தமிழும் அறிவோம்!* (வி.வே.பக் -87)

தூயத் தமிழென்று துலங்கச் சொல்வாரில்லை!
சுத்தத் தமிழென்று சொல் கூட்டி சொல்வாரே!
வித்தகராய் தமிழேத்தும் வெண்பா வேந்தே!
சொத்தாம் தமிழென்று சுவைக்க யாருண்டு?

ஆதாரம் தமிழென்றால் அப்படியா என்கின்றார்!
தமிழிலே எழுத்தில்லை என்பார் அவரும்தான்!
திருமாறன், மணவாளன், வட மொழி அறியுமோ?
மேழியும் கோழியும் தமிழன்றி எவை செப்பும்?

தங்கமும் கப்பலும் தமிழர் அழகுடன் பேசுவோம்!
எங்களின் அறிவுக்கு ஓரெழுத்துப் போதுமென்பேன்!
வாழ்வியலைப் பொருளாக்கி வகுத்தமொழி எதுவோ?
தோல்வியை ஏற்பாரோ, வடமொழியே தாயென்போர்!

ஏதும் நமக்கினி தேவையில்லை! நாளும்;
தீதின்றி தமிழ் செப்பும் சிந்தை கொள்வோம்!
வாதிட்டுப் பயனில்லை அவரிடம் எந்நாளும்,
மோதாமல் தமிழின் முகவரிதனைக் காப்போம்!
*கவிவளவன்* 22-02-2022 (10.20 PM)

## *அழகோ! மனமோ!!* (வி.வே.பக் -88)

காட்சிப் படுத்தும் கண்களின்
அழகைக் காண்பதும் எளிதாமோ?
மாட்சிமைக் கொண்ட மனத்தின்
அழகை அறிந்திடலும் எளிதாமோ?
கொட்டும் பனியால், கிட்டும் சிலிர்ப்பை
கட்டி அணைத்தல் எளிதாமோ?
பட்டும் படாமல், பனிக்குடம் சுமக்கும்
புல்வெளி யழகும் நிலையாமோ?

சிட்டுக்குருவியின் சிறகொலி கூட
சிந்தையில் நிறைதல் அழகன்றோ!
எட்டுத் திக்கும் கண்கள் சூடிட,
இறைமையின் ஆட்சி அறிவோமோ!
குட்டும் கரங்கள் குவிந்தே இருந்து,
கோள்வி னையாய் வெளிப்படுமோ!
திட்டும் மனமோ தெளிவில்லாதச்
சிந்தையின் வழிதாம் பிறப்பதுவே!
12-02-2023 (08-45 AM)

தமிழால் தமிழைச் சூடி,
தமிழில் பெயர் சூட்டுவோம்!
அமிழ்தாம் தாய்மொழியின் வழி
அறிவைக் கூட்டுவோம்!
தமதாய்ச் செறிவைத் தாங்கிய நன்மொழி!
நமதே என்பதை நம்மவரும் அறிந்திடல்
வேண்டும்! 03-03-2022

## காலன் எழுதும் கோலம்!*

காலன் எழுதும் தேதியின் கணக்கை
நமக்குக் காணத் தெரியாது!
சீலம் என்பதும் செழுமை என்பதும்,
சிதைந்திடும் மொரு நிலையாகும்!
கோலம் குலைத்து கொண்டு போவதில்,
கொள்கையும் அவன் கொள்வானோ?
பாலம் எனவாய் பலகதை யுண்டு,
பக்குவமாகிட யார்க்கு இயலும்?
ஒன்றை யொன்று அழித்தே யுண்ணும்
இந்த உன்னத வாழ்வியலில்,
கன்னா பின்னா வென்றே கதையை
முடிக்கும் காலன் செயல் யாதோ!
26-06-2022

## *மனமே கேளாய்!*

இனிமையைச் சூடும் மனமே,
இன்னலைத் தொலைத்து விடும்!
தனிமையைத் தேடும் போது,
தன்னிலை உணர்ந்து கொள்வோம்!

கனிமொழி மழலைக் கூற்று,
கன்னலின் இனிப்பை விஞ்சும்!
கனிவுடைச் சொல்லே மண்ணில்,
காலத்தை வென்று வாழும்!

இனியதை மனத்தில் சூடி,
இன்பமாய் என்றும் வாழ்வோம்!
பனியிதழ் கொள்ளும் பூக்கள்,
புன்னகை போலே நிறையும்!
08-02-2023

## எதனால் எதுவோ!*

இறப்பே வாழ்வின் இயன்நிலை ஆகும்!
இறந்தவர் பிறப்பதை எவரும் அறியோம்!
பிறந்ததின் நோக்கமும் அறிந்தவர் எவரோ?
மறந்திடும் அறிவே துன்பம் தொலைக்கும்!

கரைந்திடும் காலம் வாழ்வின் விதிமுறை!
புரிந்திடும் அறிவோ! புதுப்புது நிலையோ!
மரித்தலும் உயிர்த்தலும் வாழ்வியல் என்றால்,
புரியாக் கதைகளைப் பொழிவதும் ஏனோ?

இயங்கும் இயக்கம் எதனின் பயனோ!
தயங்கும் அறிவும் தடுமாறும் நிலையே!
முயங்கும் வாழ்வியல் முரணாய்த் தெரிவதேன்?
வியப்பின் முகவரி விரும்பியே தேடுவோம்!
*கவிவளவன்* 07-02-2022 (05.30 AM)

## தமிழையும் காப்போம்!

சீரிலங்கைத் தமிழரைப் போல்,
செந்தமிழில் பேச வேண்டாம்!
காரிருளைக் கிழிக்குமந்த கங்கும்
பொழுதழகை வெள்ளன வென்றே,
சீராய்ச் சொல்லுமந்த மொழியாம்,
செந்தமிழும் போன தெங்கே?
பேருவகை என்னும் சொல்லே,
பூரித்து முறுவல் செய்யும்!

பன்னுதமிழ் பழகி விட்டோம்!
பாங்காய் நாளும் உரைத்திடுவோம்!
எண்ணமதில் வருத்தமேது மில்லை!
எந்தமிழைச் சிதைக்கும் போழ்தில்!
பன்னு எனும் சொல்லே நாளும்,
பெயராய், வினையாய், விடையாய்,
பண்ணிசைத்து நாளும் இங்கு,
படர்ந்து வரக் காண்போமே!

மாறிவரும் காலத்தை யாவரும்,
மனமுவந்து ஏற்க வேண்டும்!
கூறிவரும் பொய்கள் எல்லாம்,
குவலயத்தை ஆள்கை கண்டோம்!
ஆறிவரும் புண்களெலாம் அங்கே,
ஆறாத வடுக்களாகும் நிலையுண்டு!
செறிவுடைய தமிழ்மொழியை மரபை,
சிந்தித்து காப்போம் நாமே!

**-கவிவளவன்.** 26-05-2023 (இரவு 10.15)

## இறையோ எதுவோ?

இறையோ இயற்கையோ நிகழும் யாவையும்,
இயன்நிலை என்றே கொள்ளல் வேண்டும்!
முயன்று நாமும் மோதி நின்றால், தாமே
தீமைகள் தயக்கமின்றியே வந்து சேரும்!

இயக்கம் இதனின் இயன்நிலை இதுதான்,
ஐயன் வள்ளுவனார் அழகாய்ச் சொன்னான்,
அளிப்பதும் கெடுப்பதும் ஆன்ற மழையென்றே!
புளிப்பும் சுவையே இனிப்பும் சுவையே!

புரியாதிருந்தால் மயங்கும் வாழ்வே!
புண்ணியமும் பாவமும் மனிதனின் கணக்கு!
திண்ணமாய் அறிவில் நன்மைகொண்டு தேட,
வண்ணமாய் நிறைவது இறையோயெதுவோ?

**-கவிவளவன்.** 27-05-2023 (நண்பகல் 12.55)

## யாருக்கு எது வேண்டும்? [Classic 4 –Page 8]

இல்லத்தில் மகிழ்ச்சி வேண்டும்!
போராடும் வாழ்க்கை இது,
பொலிவின்றி முடியும் ஒருநாள்!

நீரோடும் வழி மறித்தால்,
நெஞ்சத்தில் வலி பிறக்கும்!
சீரோடு அதன் வழியில்,
சென்றிட்டால் மீண்டிடலாம்!

காற்று நம்மை நாளும்,
கடக்கையில் உணர்வ தில்ல!
மூச்சு நம்மில் நாளும்,
முகிழ்தலும் இதனா லென்றே!

பிறந்தன யாவும் ஒருநாள்
இறத்தல் என்பதே கணக்கு!
வருத்தம் நெஞ்சில் சுமந்தால்,
வாழ்க்கை நாளும் நகருமோ?

பிறவியின் சூட்சமம் அறியும்வரை,
பொலிவுடன் மகிழ்ந்தே இருப்போம்!
பிழையின்றி வாழ்வில் நாளும்,
பிறவியின் நிலையை தேடிடுவோம்!

**கவிவளவன்** 02-06-2023 (இரவு 11.05)

## சில குறும்பாக்கள்!

1. வானில் வெளிச்சம்,
பறவைக் கூச்சல்!
மண்மனம் காற்றில்!

2. இதழ்கடைப் புன்னகை,
கண்களில் வெள்ளி!
இயற்கையின் இசைவு!

3. கூச்சலில் பிறந்தது!
ஓலத்தில் அமிழ்ந்தது!
காலத்தின் நிறைவு!

4. குதிரை லாயம்!
குதிரைகள் இல்லை!!
மனிதர்கள் வாழ்கிறார்கள்!

7. யானைக் கவளம்;
சிதறிய மண்ணில்,
எறும்புகளுக்கு கொண்டாட்டம்!
18-03-2023

5. தப்பும் நடையில்,
தப்பாத வளையோசை;
பிறப்பின் முகவரி எழுதும்!
18-03-2023

6. ஈட்டி சொல் மறந்து,
இதழ் வருடும் புன்சிரிப்பு;
மனிதனின் முகம்!
18-03-2023

## சித்தார்த்தன்

சித்தார்த்தன் சிந்தித்தே **புத்தனா**னான்!
தத்துவமாய் வாழ்வின் தகைமை சொன்னான்!
எத்திக்கும் இருள்நிலையாய் நின்ற மாந்தர்,
எழுந்திடவே வாழ்வின் முழுமை சொன்னான்!

வழுவாது வாழ்வியலின் வண்ணம் தீட்டி,
எழுகின்ற மனம்கொள்ள இயம்பி நின்றான்!
தழுவிய மனமெல்லாம் அவனைக் கடவுளாக்க,
வழுவியதே அன்னவனின் தேடல் யாவும்!

தழுவியவர் வாழுகின்றார் தரணியெங்கும்!
நழுவியதே சிந்தனையின் மெய்யியல்தானே!
உழவின்றி பயிர்விளைதல் எங்ஙனமாகும்?
உழலும் மனமெங்கே தெளிவைக் காணும்?

**- கவிவளவன்.**
24-09-2025 (இரவு 08-55)

## எதுகை மோனை!

கன்னித் தமிழ் சோலையிலே யானும்
கவிதை பாட வந்தேனோ?
எண்ணமெல்லாம் ஈடேற எதுகை மோனை
தேடி நின்றேனோ?
வண்ணமான சிந்தையதும் தானே
வளராமல் நின்றதுவோ!
கண்ணிமைக்கும் நேரத்து கற்பனைதான்
காணாமல் போயினதோ!
பண்ணமைத்து பாட்டிசைக்கும் சீர்மிகு
பாவலர்தான் தேடுவரோ?
வண்ணத்தமிழ் சொற்களிலே நாமும்
வாடாமல் நிற்க வேண்டும்!
வருகின்ற சொற்களெல்லாம் நன்கு
வனப்புடன் நிற்கையிலே,
எதுகை மோனத் தேடியே நானும்
ஏமாந்து நிற்பேனோ!
வதுவை கூடும் காதலெனா சொற்கள்
வந்தவுடன் அரங்கேற,
கவிதையதும் மணத்திடுமே மனத்தில்
மறுவின்றி நிலைத்திடவே!
எதுகை மோனை தேடி ஏமாந்து
போகாமல் இருப்பேனோ!
என்னுள்ளே கவிதையதை எழுப்பிடும்
இறையே எனைநீயே திருத்திடுக!

**-கவிவளவன்.**
12-05-2025 (இரவு 11.05)

## மனமே கலன்!

உள்ளமே அறிவின் திறவுகோல்!
உலகில் ஆள்வது நம் மனமே!
கலக்கமாய் மனத்தை கூட்டாமல்,
கற்பனை அழகை சிதைக்காமல்,
சொற்பதம் கூட்டிச் சிந்தித்து,
சுகமாய் என்றும் வாழ்ந்திடுவோம்!

- **கவிவளவன்.** 02-09-2025

## குறும்பாக்கள்!

1. தன்னை இழந்து,
காகிதம் ஆகி,
என் கவிதைகளை
பதிப்பிக்கின்றது மரம்!

-**கவிவளவன்.**
02-09-2025

2. தூண்டில் புழுவைப்
பார்த்து துள்ளி ஓடிய
மீன் தானும் சிக்கியது!

- **கவிவளவன்.**
02-09-2025

## உவந்து மகிழ்வோம்!

காலமிது செய்கின்ற கலையாத கனவுகளை நாளும்,
கோலமிட்டு மனமெழுதி நாம் கொண்டாடி மகிழ்ந்திவோம்!
ஞாலமிதில் வாழும்வரை நல் நட்பைநாம் பேணிடுவோம்!
மூலமென்று மனம்தேடும் முடிவிலாத அந்த நிலையறிதல்,

சீலமென்று அறிந்தாலும் சிந்தித்து நாமும் தெளிவோமோ?
கோலமிடும் மனக்கணக்கில் கொண்டாடும் சீர் நிலையிருந்தால்,
பாலமின்றி மனங்கோத்து கொண்டாடும் பங்கய நிலையாவோம்!
ஆலத்தின் விழுதைப் போல் மண்ணில் ஆழ்ந்துநிலைகொள்வோம்!

**கவிவளவன்.** 24-09-2025 (இரவு 08-20)

3. தோளில் எறியதும்
சுகமாய் இருந்தது கோடாலிக்கு,
வெட்டுப்படப் போவது
தன் இனம் என்ற
விபரம் தெரியாத நிலையில்!

- **கவிவளவன்.** 02-09-2025

4. ஆடிய கைகளின்
அசைவில் நாவில் தேன் துளி!
கையும் முகமும் முத்து
முத்தாய் முகவரி பூண்டன!

- **கவிவளவன்.**
02-09-2025

5. கழுத்தை திருகும்
முன், காலையில்
கூவியது கோழி!
யாருக்கு விடியலோ!

- **கவிவளவன்.**
02-09-2025

6. தண்ணீரால் மகிழ்ந்து,
தத்தளித்த தவளை,
கத்தியே பாம்புக்கு இரையானது!
- **கவிவளவன்.** 02-09-2025

# தாய்மொழி கற்போம்!

தேமதுர தமிழ் என்று
திக்கட்டும் பேசுகின்றோம்!
மாமதுரை பிறந்தது என்று
மனங்கூட்டி மகிழ்கின்றோம்!
மடவார்த்தம் மொழியிலே தமிழ் இல்லை!
மருவின்றி பிள்ளைகளும் கற்பதில்லை!
பண்ணு தமிழ் பேசி வாழுகின்றார்!

பைந்தமிழ் சொல்லிற் கங்கே,
பயனேதும் இல்லை!
அழகான சொல் விடுத்து,
அவல நிலை கொள்வதிலே
தமிழருக்கிங்கே இணையானோர்
தரணியிலே எவரும் இல்லை!

அருவியென்னும் தமிழ்ச் சொல்லை,
அழகாக விட்டெறிந்து,
ஆங்கிலத்தில் மொழி மாற்றி
நீர்வீழ்ச்சி எனச் சொல்லி
நிரந்தரமாக விழுகின்றோம்!
- **கவிவளவன்.** 02-09-2025